Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 26    (11 - 08 - 1991)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை: 174

## போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களம் இடைநிலைத் தொழில்நுட்பவியலாளர் சேவையில் IIIஆம் தர விவசாயப் போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. கடந்த 19-07-91 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை (4ஆம் பக்கம் பார்க்க)

### ஆனையிறவில் தொடர்ந்தும் கடும் மோதல்

# புலிகளும் இராணுவமும் மாறி மாறி

# ஒருவர் நிலை மீது ஒருவர் தாக்குதல்

## 25க்கு மேல் படை பலி; 140 மேல் காயம்

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவமுகாமின் தென்பகுதியில் கடந்த மூன்று நாட்களாக சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்ச்சியாக கடும்மோதல்கள் இடம்பெற்று வருகின்றன பரஸ்பரம் மாறி மாறி ஒருவர் நிலைகளை ஒருவர் தாக்கி வருகின்றனர். இந்த மூன்று நாட்போரில் குறைந்தது இருபத்தி ஐந்திற்கு மேற்பட்ட இராணுவததினர் கொல்லப்பட்டும் நூற்றுநாற்பதற்கு மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்தும உள்ளனர். புலிகள் தரப்பில் பலர் வீரமரணமடைந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை ஆனையிறவு முகாமின் (உப்பளம்) தென் மேற்குமூலையில் புலிகளின் நிலைகள் மீது இராணுவத்தினர் விமானப் படையின் உதவியுடன் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இதைத் தொடர்ந்து கடும் மோதல் மூண்டது. இதில் இராணுவத்தரப்பில் பலர் கொல்லப்பட்டனர். அறுபதிற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இம்மோதலை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் ஆறு இராணுவம் கொல்லப்பட்டதாகவும் 60 இராணுவத்தினர் வரையில் காயமடைந்ததாகவும் தெரிவித்தது.

இம்மோதலின் தொடர்ச்சியாக நேற்று முன்தினமும் முகாமின் தென்பகுதியில் இராணுவம் தாக்குதலைத் தொடுத்தது. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதல் இரவுவரை நீடித்தது. இந்த மோதலையும் ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இதில் பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், அறுபது இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் அறிவித்தது.

இந்தஆனையிறவுச் சண்டையைப் பற்றிக் குறிப்பிட்ட இராணுவ அதிகாரி ஒருவர் முகாமின் தென் பகுதியில் 500க்கும் மேற்பட்ட புலிகள் தமது நிலைகளில் பாதுகாப்பாக இருந்து கொண்டு தாக்குதல் நடத்துவதாகவும் முகாமின் வடபகுதியில் 300க்கும் அதிகமானோர் தாக்குதல் நடத்துவதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை நேற்று ஆனையிறவு முகாமின் தென்மேற்குப் பகுதியில் இராணுவத்தினரின் நிலைகள் மீது புலிகள் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். சில மணிநேரம் நீடித்த இம்மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இம்மோதலைப்பற்றி குறிப் (4ஆம் பக்கம் பார்க்க)

## லஞ்சம் பெற்ற ஒன்பது இராணுவத்தினரும் பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட பொருள்களை யாழ். குடா நாட்டிற்குள் எடுத்துச் செல்ல லஞ்சம் பெற்றுக் கொண்டு அனுமதித்ததற்காக கைதுசெய்யப்பட்ட ஒன்பது இராணுவத்தினரையும் கொழும்பு நீதி மன்றம் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

லஞ்ச எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் இவர்கள் மீதான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பிணையில் விடுவிக்கப்பட்ட ஒன்பது இராணுவத்தினரில் ஒரு கப்டனும், லெப்ரினன்ட்டும் அடங்குவர்.

## தமிழகத்தில் புலிகள்; நீதி விசாரணை வேண்டும்

- வாழப்பாடி ராமமூர்த்தி

(சென்னை)

தமிழ் நாட்டில் புலிகள் நடவடிக்கை குறித்துத் தமிழக அரசு நீதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே. ராமமூர்த்தி கோரியுள்ளார்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம்பேசுகையில், புலிகளுக்கும் தி.மு.க. வினருக்கும் இடையே நெருங்கிய தொடர்புஇருப்பதாகத் தான் முந்திக் கூறிய குற்றச் சாட்டு இப்போது நிரூபிக்கப்பட்டு (4ஆம் பக்கம் பார்க்க)

## இல. தமிழரைச் சந்திக்க ஜெயலலிதா மறுப்பு

(சென்னை)

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை இலங்கைத் தமிழர் சந்திக்க முடியாது. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அவரைச் சந்திப்பதற்கான அனுமதி இலங்கைத் தமிழர்களுக்கு மறுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசியல் தலைவர்கள் இவ்வாறு நடந்துகொண்டதற்கான முன்மாதிரி எங்கும் இல்லை.

ஜெயலலிதா முதல்வராகப் பதவி ஏற்றவுடன் மகஜர்களைப் பெறுவதற்காகவும் பொதுமக்களைச் சந்திப்பதற்காகவும் கிறீன் வேஸ் வீதியில் அலுவலகம் ஒன்றைத் (4ஆம் பக்கம் பார்க்க)

## மருந்து விற்பனையாளர் கைது

(சென்னை)

மருந்துச் சிட்டை எதுவும் இல்லாமல் மருந்து வகைகளைப் புலிகளுக்கு விற்பனை செய்ததாக மருந்துக்கடைக்காரரான அருணாசலம் என்பவரைஇந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## தென்னாபிரிக்காவில் ஐவர் பலி

[கேப்ரவுண்]

தென்னாபிரிக்க அரசுத் தலைவர் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் தீவிர வலதுசாரிகள் கலவரம்செய்தபோது ஏற்பட்ட மோதலில் ஐந்து பேர் கொல்லப்பட்டதுடன் ஐம்பத்துநான்கு பேர் காயமடைந்தனர்.

ஜெகன் ஸ்பேக் நகருக்கு மேற்கே இக்கலவரம் இடம் பெற்றபோதுபொலிஸாருடன் கடும் மோதல் ஏற்பட்டது. கலவரத்தில் துப்பாக்கிச்சூடும் நடாத்தப்பட்டது. இதில் ஐந்து பொலிஸாரும் காயமடைந்தனர்.

### ஆசிரியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு

## செப்டெம்பர் சம்பளத்துடன் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1989 ஜூலை முதல் 1989 டிசெம்பர் வரைக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் பெரும்பாலான ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டுவிட்டன. இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படாத ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை 1991 செப்டெம்பர்மாதத்திற்கான சம்பளத்துடன் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் இதற்கான அனுமதியை யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வடக்கு கிழக்கு கல்வி அமைச்சில் இருந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எடுத்துக் கொடுத்து இருப்ப (4ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான யாத்திரை நிதி வடக்கு - கிழக்கு போருக்கு

(கொழும்பு)

அனுராதபுரம் புனித வெள்ளரசு மரத்தடியில் இருந்து சமாதான பாத யாத்திரை ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வரை சென்ற சிங்கள இளைஞர்குழு ஒன்று தேசிய பாதுகாப்பு நிதிக்கு சுமார் 36,000 ரூபாவை வழங்கியுள்ளது.

சுமார் 130 மைல் தூரம் வரை நடந்து நேற்று முன்தினம் பாராளுமன்ற கட்டடத்தை சென்றடைந்து தாம் சேகரித்த மேற்படி பணத்தை பிரதம மந்திரியிடம் கையளித்தனர்.

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் மூலம் பெறப்படும் பணம் வடக்கு கிழக்குப் பகுதியில் நடைபெற்று வரும் யுத்த நடவடிக்கைகளுக்கு அரசு செலவிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பிராந்திய கூட்டுறவு மூலம் தெ.ஆசியாவில் அபிவிருத்தி

(கொழும்பு)

''பிராந்தியக் கூட்டுறவின் மூலம் தெற்காசியாவில் சமூக, பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

தெற்காசியசம்மேளனகணக்காய்வாளர்களின் பிராந்தியக் கருத்தரங்காகிய இதில் பங்களாதேஷ், நேபாளம், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் பங்குபற்றின.

தெற்காசியகணக்காய்வாளர் சம்மேளனம் 1984ஆம் ஆண்டு இந்தியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஆயுத உற்பத்தியில் தனியார்துறைக்கு அனுமதி

- சரத்பவார்

(டில்லி)

பாதுகாப்பு ஆயுத உற்பத்தியில் தனியார் துறை அனுமதிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் கூறுகிறார்.

தெற்கு கோவாவில் வாங்கோ என்ற இடத்தில் கமலாதேவி என்ற பெயர் கொண்ட இரண்டாவது விரைவு கலத்தை வெள்ளோட்டம் விட்ட பிறகு செய்தியாளரிடம் பேசிய சரத்பவார் (4ஆம் பக்கம் பார்க்க)

## காலாவதியாகிவிட்ட ஆசிரியர் காசோலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்குப் பரீட்சைத் திணைக்களம் வழங்கிய காசோலைகள் காலாவதியாகிவிட்டன.

கடந்த மே மாதம் நடைபெற்ற க. பொ. த உயர்தரப் பரீட்சையின் போது கடமையாற்றியவர்களுக்குரியகாசோலைகளே இவ்வாறு காலாவதியாகிவிட்டன இதனால் இவர்கள் தமது ஊதியத் (4ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

### கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு 40 மணித்தியாலத்தில் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி.

(R/1629)

### தேவை

தவிடு, பிண்ணாக்கு, மீன் தூள், சோளம் என்பவற்றை தொகையாகவும், தொடர்ச்சியாகவும் வழங்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கலாசாலை வீதி. திருநெல்வேலி கிழக்கு.

(B-2934)

## பட்டமளிப்பு சான்றிதழ் பெறுதல்

06-07-91 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு வைபவ சான்றிதழை பெறத் தவறிய பட்டதாரிகள் உடனடியாக அவற்றை யாழ். பல்கலைக்கழகத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும் அல்லது அவருக்குரியவர் தகுந்த அத்தாட்சிக் கடிதத்துடன் பெற்றுக் கொள்ளவும்.

-- பதிவாளர்

(B-2932)

## கடையில் திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ். திருநெல்வேலியில் உள்ள கடை ஒன்று கடந்த 6 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு (6 - 8 - 91) உடைக்கப்பட்டு அக்கடையில் உள்ள லக்ஸ்பிறே பெட்டிகள், அரிசி, சீனி, மா போன்ற பெறுமதிமிக்க பல பொருள்கள் திருடர்களால் களவாடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## மெய்வல்லுனர் போட்டி

(கொக்குவில்)

கொக்குவில் முரளி ஞாபகார்த்த பாலர் பாடசாலையின் மெய்வல்லுனர் போட்டி இன்று நாமகள் வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும்.

பிற்பகல் 1-00 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகள் மாணவ இயக்கப் பொறுப்பாளர் திரு. அரவிந்தன் மற்றும் திரு. மரிசாலப்பா ஆகியோர் கலந்து கொள்வர்.

## வீர மரணம்

### வீரவேங்கை பதுமநிதி

(சிறீதரன் சுதாசினி)

ஆனையிறவில் சிங்கள இராணுவத்தினருடனான நேரடி மோதலில் 08.08.91 அன்று வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட இவர், மயிலிட்டி துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற சோ. சிறீதரன், திருமதி புனிதக்கிளி சிறீதரன் ஆகியோரின் புத்திரியும், சி. மகேசினி, சி. கண்ணன் ஆகியோரின் சகோதரியும், தேசபக்தர் சோதி (பரமநாதன்) வீரவேங்கை சஞ்சீவி (மகேசநாதன் வீரவேங்கை கப்டன் நெடுமாறன் (கணேசநாதன்), காலஞ்சென்ற தங்கேஸ்வரன் (குட்டி) சிவயோகநாதன், மோகன் (L.C.L துறைமுகம்), தேவர் (த. வி. பு. மூத்த உறுப்பினர்), லலிதா கமலேஸ்வரி லலி, கௌரி, தங்கன், பாபு ஆகியோரின் மருமகளும், விவேகானந்தன், ரதிமலர் ஆகியோரின் பெறாமகளும், திருமதி வைத்திலிங்கம் லட்சுமி அம்மாவின் பேர்த்தியுமாவார். இவ்வறிவித்தலை விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவம் வீதி,
உரும்பராய் கிழக்கு
உரும்பராய்

தகவல்
மோகன்
(R-1630)

## ஓராண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 14 -- 04 -- 1971

வீரமரணம் 23 -- 07 -- 1990

### வீரவேங்கை பிரசன்னா

(புதிய க்குட்டி - தயாபரன்)

திதி: 11-08-1991

வேங்கை நீ மடிந்ததில்லை – உன்
வீரமும் குறைந்ததில்லை
ஓங்கிய போர்முனையில் நீ
ஒதுங்கியும் நின்றதில்லை
பாங்குடன் போர்புரிந்து - நீ
பகைவரை வீழ்த்தும் வேளை
தாங்கினாய் நெஞ்சில் குண்டை
தமிழ் அன்னை சிலிர்த்தே போனான்.

தயாபரன் வீதி,
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்
(R-1632)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 08 - 11



### சஞ்சீவி

1984 ஆம் ஆண்டு யாழ். சுன்னாகத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா காவல் நிலையத்தின் பொறி வெடியில் சிக்கி வீரமரணமெய்திய
நிக்கி (நிகேதரன் - சுன்னாகம்)
சஞ்சீவி (வைத்திலிங்கம் மகேசநாதன் - மயிலிட்டி)

இதே ஆண்டு சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

1986 ஆம் ஆண்டு மல்லாவியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
ஜீவா (கந்தையா கெங்காதரன் - மடுக்கோயில், மன்னார்)

1987 ஆம் ஆண்டு சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் எதிர்பாராத விதமாக நிகழ்ந்த வெடிவிபத்தில் எமைப்பிரிந்த
2ஆம் லெப். அப்பன் (வெற்றிவேலு சிவசிறி - இத்தாவில், பளை)
2ஆம் லெப். சதீஸ் (சற்குணநாதன் பிரகலாதன் – மிருசுவில்)
கருணா (செல்லத்துரை தயாபரன் - எழுதுமட்டுவாள்)
கமல் (கனகலிங்கம் சிவனேசன் – மீசாலை)

1989 ஆம் ஆண்டு பண்டத்தரிப்பில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு பெண் உட்பட 2 தமிழர்கள்

1990ஆம் ஆண்டு சுண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா கடற்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
மதன் (திருக்கோணமலை)

அரவம் தீண்டியதால் எமைப்பிரிந்த
2ஆம் லெப். தான்பரீன் (செ. யேசுதாசன் - தாமரைக்குளம் அடம்பன், மன்னார்)

அம்பாறையில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 15 தமிழர்கள்

சம்மாந்துறையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 37 தமிழர்கள்

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட யாழ். மத்திய கல்லூரி மாணவன்

கொல்லங்கலட்டியில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2718)

## தாதிப் பயிற்சி நெறி

நாட்டு நிலை காரணமாக தடைப்பட்டிருந்த தாதியர் பயிற்சி நெறி 15-8-91இல் ஆரம்பமாகின்றது. முன்னர் விண்ணப்பித்திருந்த மாணவிகளும், புதிதாக பயிற்சி பெற விரும்பும் மாணவிகளும் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு பயிற்சியைத் தொடரலாம்.

### ஆண்களுக்கான அவசரகால தாதியர் பயிற்சிநெறி

15-8-91இல் ஆண்களுக்கான தாதியர் பயிற்சிநெறி ஆரம்பமாகின்றன. அவசரகால தாதியர் சேவையில் கடமைபுரிய உறுதியளிப்பவர்களுக்கு இலவசபயிற்சி, வயதெல்லை கிடையாது.

தகைமையுடைய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மாவீரர் / போராளிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலவச பயிற்சி.

வைத்திய கலாநிதி **வி.பி.சுந்தரராஜன்**

அதிபர்

**சாயி மருத்துவக் கல்லூரி**

இல. 6, பருத்தித்துறை வீதி
(1ஆம் ஒழுங்கை, மக்ரவல்ஸ் அருகில்)
யாழ்நகர்.

(B-2933)

## ❦ சிந்தனைக்கு ❦

விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெமை எதிர்த்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னை
தொழுதிடல் மறக்கிலேனே.

— சுப்பிரமணிய பாரதியார்.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 11-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

# மற்றுமொரு வகையில் தொடரும் தாக்குதல்

வடமாகாணத்தில் அகதி முகாம்களில் வாழ்பவர்கள் தவிர்ந்த ஏனையவர்களுக்கு வழங்கிய சகல உலர் உணவு நிவாரணங்களையும் உடன் நிறுத்தும்படி சிறிலங்கா புனர்வாழ்வு அமைச்சு சகல அரச அதிபர்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவால் யாழ் மாவட்டத்தில் மட்டும் சுமார் ஒருலட்சத்து அறுபத்திஐயாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்கள் தனியாக அகதி முகாம்களில் மட்டும் வாழவில்லை. உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் பெருமளவு வாழ்கின்றார்கள். இடம் பெயர்ந்த குடும்பங்களில் அகதி முகாம்களில் வாழும் குடும்பங்களைவிட வெளியில் வாழ்பவர்களின் எண்ணிக்கையே அதிகமாகும்.

அதேவேளை, நிவாரணம் பெற்று வந்தவர்களில் இடம் பெயர்ந்தவர்களைவிட சிறிலங்கா அரசாங்கத்தின் பொருளாதார, எரிபொருள் தடையினால் தொழில் வாய்ப்புக்களையும், இராணுவ நடவடிக்கையால் மூல தனங்களையும், தொழில்களையும் இழந்தவர்களும் அடங்குவர். இந்த வகையில் யாழ். மாவட்டத்தில் மட்டும் சுமார் ஒருலட்சத்து நாற்பதாயிரம் குடும்பங்கள் நிவாரணம் பெற்று வருகின்றன.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நடவடிக்கை திட்டமிட்ட ஒரு இன ஒடுக்கல் நடவடிக்கையாகும். இதன் மூலம் வடக்கில் ஒரு பட்டினிச்சாவை ஏற்படுத்த முனைகின்றது. ஆனால் இது சிறிலங்கா அரசாங்கத்தின் உடனடித் திட்டமல்ல, ஒரு நீண்ட காலத் திட்டமாகும்.

பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை என்பனவற்றின் மூலம் தமிழரின் தேசிய இனப் போராட்டத்தை மழுங்கடிக்கலாம் எனத் திட்டமிட்டு அதில் வெற்றிபெற முடியாத நிலையில் தற்பொழுது மானியத்திட்டங்களையும, நிவாரண நடவடிக்கைகளையும் நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

பொருளாதாரத்தடை, எரிபொருள்தடை என்பவற்றால் வடமாகாணத்தில் என்றுமில்லாதவாறு அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது. இதன் காரணமாக பெருமளவு பொருள்களின் பாவனையை மக்கள் கைவிட்டும் உள்ளார்கள் இந்த நிலையில், இடம் பெயர்ந்த மக்களும், தொழில் இழந்த மக்களும் உலர்உணவு நிவாரணத்தையே பெருமளவு நம்பியிருந்தனர். ஒருவருடகாலத்திற்கு மேலாக ஒன்பது நிவாரணக் கொடுப்பனவுகளே வழங்கப்பட்டிருப்பினும் அவர்களின் உயிர் வாழ்க்கைக்கு இந்த நிவாரணங்கள் மிகவும் அத்தியாவசியமானவையாக இருந்து வந்துள்ளன. இந்த நிலையில் உலர் உணவு விநியோகத்தை நிறுத்துதல் என்பது தமிழர்களை திட்டமிட்டு பட்டினிச் சாவிற்குத் தள்ளும் ஒரு மிருகத்தனமான நடவடிக்கையாகும்.

இந்த நடவடிக்கையை சிறிலங்கா அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டது. பொருளாதாரத்தடையும், இராணுவ நடவடிக்கையும் வெற்றி அளிக்காது போகவே இந்த நடவடிக்கை தொடங்கியது இதன் முதற் கட்டமாக வடக்கில் நடைமுறைப்படுத்தப் பட்டு வந்த ஜனசக்தி திட்டம் யுத்தச் சூழ்நிலையைச் சாட்டாக வைத்து நிறுத்தப்பட்டது அடுத்த கட்டமாக உணவு முத்திரைகள் விநியோகிப்பது நிறுத்தப்பட்டது. உலர் உணவு விநியோகம் நடைபெறுவதால் உணவு முத்திரைகள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை ஜனசக்தி திட்டம் செயற்படுத்தப்படுவதனால் இலங்கை பூராவும் உணவு முத்திரைத் திட்டம் செப்டெம்பருடன் கைவிடப்படவுள்ளது. ஆனால் வடக்கைப் பொறுத்து ஜனசக்தியும் இல்லை. உணவு முத்திரையும் இல்லை.

மேலும் வடக்கில் மட்டும் உலர் உணவு விநியோகம் நிறுத்தப்படுதல் என்பது இன ஒடுக்கலின் அப்பட்டமான வெளிப்பாடாகும். கிழக்கில் முகாம்களுக்கு வெளியில் சிங்களவர் இருப்பதனால் இந்த உத்தரவு பொதுப் படையாக பிறப்பிக்கப்படவில்லை. ஆனால், அங்கும் வழமை போல் சிங்களவருக்கு நிவாரணங்களை வழங்கி விட்டு தமிழர் புறக்கணிக்கப்படலாம்.

சிறிலங்கா அரசாங்கம் தமிழரை அழித்தொழிப்பதற்கென எந்தவிதமான இன ஒழிப்பு நடவடிக்கையும் அநாகரிகமான முறையில் மனிதநேயமின்றி மேற்கொள்ளும் என்பதற்கு இது சிறப்பான எடுத்துக்காட்டாகும். அதேவேளை சிறிலங்கா அரசாங்கம் தனது கடைசி அஸ்திரத்தையும் தமிழர் மீது எய்யத் தயாராகி விட்டது என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

# காலத்தின் தேவை கருதிப் போராட முன்வாருங்கள்

**- செல்வம் மாமா**

(முல்லைத்தீவு)

சிங்கள இளைஞர்கள் எமது மண்ணை ஆக்கிரமிப்பதற்கு சாகக் கூட தயாரானால் எமது தமிழ் இளைஞர்கள் இன்னுமா சிந்திக்கவில்லை அண்மையில் இந்த மண்ணை அபகரிக்க சிங்கள இளைஞர்கள் 20,000 பேர் வரையில் இராணுவத்துடன் சேர்ந்துள்ளனர். இந்நிலையில்இன்றைய காலத்தின் தேவை கருதி விடுதலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நாட்டைக் காக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து வயது வேறுபாடின்றி ஆயுதம் ஏந்த முன் வாருங்கள்.

மேற்கண்டவாறு கடந்த புதன்கிழமை முள்ளியவளை மாவீரர்கள் மண்டபத்தில் முல்லை வட்ட அவைத்தலைவர் பரந் தலைமையில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய விடுதலைப்புலிகள் நிர்வாக பொறுப்பாளர் செல்வம் மாமா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில் தென் தமிழீழத்தின் நிலை இங்கும் வேண்டாம். இன்று இங்குகாவலரண்களில் காவல் நிற்கும் விடுதலைப் புலிகளை அழித்த பின் தான் ஒரு தாயையோ, தங்கையையோ தொட முடியும். அந்த நிலை ஒரு புலி வீரன் உயிருடன் இருக்கும் வரை நடைபெறாது. எனவே வீட்டுக்கொரு வீரன் புலிகளுடன் இணைந்து தாயைக்காப்பாற்றுங்கள், தங்கையை காப்பாற்றுங்கள், வீட்டைக்காப்பாற்றுங்கள், நாட்டைக்காப்பாற்றுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

இக் கூட்டத்தில் முல்லை மாவட்ட மகளிர் படை அணி நிர்வாக பொறுப்பாளர் செல்வி நித்திலா அவர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

# மேஜர் ஜேம்ஸின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பல நூறு மக்கள்

(வல்வெட்டித்துறை)

வீரமரணமடைந்த மேஜர் ஜேம்ஸ், வீரவேங்கை ஞானம் ஆகிய போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அஞ்சலிக் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் மாலை 5 00 மணியளவில் வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் திரு அரசண்ணா, திரு. பரந்தாமன், திரு. பரா ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

# தமிழக மரதன் வீரருக்கு வெண்கலப் பதக்கம்

(சென்னை)

ஐரோப்பாவில் பின்லாந்து நாட்டில் இடம் பெற்ற உலக மரதன் ஓட்டப் போட்டியில் தமிழ் நாட்டைச் சேர்ந்த வீரபத்திரர் வெண்கலப் பதக்கம் பெற்றிருக்கிறார்.

42 கி. மீ. தூரத்தை அவர் இரண்டரை மணி நேரத்தில் ஓடி முடித்தார்.

கடந்த ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற மரதன் போட்டியிலும் வீரபத்திரர் வெண்கலப்பதக்கம்பெற்றார்.

# இந்தியத் தமிழர் என்றே விண்ணப்பிக்கவும்

**-- தொண்டமான்**

(மஸ்கேலியா)

அரசாங்க வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கும் இந்திய வம்சாவழியினர் சிறிலங்காத் தமிழர் என்று தமது சாகியத்தை வெளிப்படுத்தக் கூடாது. இந்திய வம்சாவழியினர் என்றுதான் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு தெரிவீத்தார் கிராமிய தொழில் அபீவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் எஸ். தொண்டமான்.

அண்மையில் கொட்டகலையில் அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை தடகள விளையாட்டுப் போட்டியில் பேசும் போதே அமைச்சர் எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சிறிலங்கா ஜனத்தொகையில், இந்திய வம்சாவழியினர் ஐந்தரை விகிதம் உள்ளனர் என்றார். இந்தியவம்சாவழியினர் என்று சாகியத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில், இந்திய வம்சாவழியினர் தொழில் வாய்ப்புகளில் தமக்குரிய பங்கைப் பெற்றுக் கொள்ளலாம். 1100 வெற்றிடங்கள் அரச ஸ்தாபனங்களில் இருந்தால் அதில் 55க்கும் சற்று அதிகமான வெற்றிடங்கள் இந்திய வம்சாவழியினர் பெற இது உதவியாக இருக்கும் என்றார் அவர்.

# விசேடஅபிஷேகம்

அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமையன்று விசேட சங்காபிஷேகமும், புதிய தண்டிகையில் சுவாமி வீதி வலம் வரும் நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. பிரபலகலைஞர்களின் நாதஸ்வர கானம் முழங்க, பொன். சுந்தரலிங்கம் இன்னிசைக் கச்சேரியும் இங்கு இடம் பெறவுள்ளது.

★ ★

போராளிகளுக்கு தெய்வ ஆசி வேண்டி கலட்டி அருள் மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விசேட அபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனையும் இன்று நடைபெறவுள்ளது.

# காஷ்மீர் பிரச்சினை மூலம் கவனத்தை திருப்ப வேண்டாம்

(டில்லி)

காஷ்மீர் பிரச்சினையை எழுப்புவதன் மூலம் முக்கியமான இரு தரப்புப் பிரச்சினைகளிலிருந்து கவனத்தை திருப்ப வேண்டாம் என்று பாகிஸ்தானுக்கு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இஸ்தான் புல்லில் நடைபெறவுள்ள இஸ்லாமிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில், தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற பாகிஸ்தான் முயலுவதும், காஷ்மீரில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் நடமாடுவதாக பாகிஸ்தான் ஓலமிடுவதும், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கிடையே நிலவும் உறவுகளை தெளிவாகப் புலப்படுத்துகிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தானில் வெளியுறவு செயலாளர் திரு. சகாயத்கான் அந்நாட்டுப் பிரதமரின் சிறப்புத் தூதுவராக இந்தியா வரவிருப்பது குறிப்பிட்டபோது இருதரப்புப் பிரச்சினையைத் தீர்க்க நடைமுறைக்கேற்றயோசனைகளை கொண்டு வருவார் என எதிர்பார்ப்பதாகக் கூறினார். பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா எப்போதும் ஆர்வமாக இருப்பதாக கூறிய அவர், இந்தியாவின் பிரதேச ஒருமைப்பாடு பாடு, உள் விவகாரங்களில் தலையிடாமை போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக புதிய யோசனைகள் அமைய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

# சமுகம் கொடுக்கவும்

வலிகாமம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் கொத்தணி ரீதியான தொடர்பாளர்கள், கிராமிய ரீதியான தொடர்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் இன்று காலை பத்து முப்பது மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் சமுகம் கொடுக்கும்படி வலிகாமம் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வெற்றிக்காக விசேட வழிபாடு

மண்மீட்புப் போரில் விடுதலைப் புலிகள் வெற்றிபெற வேண்டியும் நல்லாசி வேண்டியும், முல்லைத்தீவுப் பிரதேசக் கோயில்களில் விசேட அபிஷேகம் மற்றும் பூஜைகள் இடம்பெற்றன. அவற்றில் சில வருமாறு:

★ தண்ணீரூற்று ஊற்றங்கரை விநாயகராலயத்தில் கடந்த 19 - 07 - 91 அன்று விசேட அபிஷேகமும், தீபாராதனையும் இடம்பெற்றது. முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவிகளினால் திருமுறை ஓதுதலும் இடம்பெற்றது.

★ வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயத்திலும், ஞானமூர்த்தி ஆலயத்திலும் 23-07-91 அன்று விஷேட அபிஷேகங்கள், ஆராதனைகள் இடம் பெற்றன. இங்கு விசேடமாக அன்னதானமும் இடம்பெற்றது.

★ முள்ளியவளை ஆதி வைரவர் ஆலயத்தில் அபிஷேகங்கள், தீபாராதனைகள் இடம் பெற்றன.

இந்த ஆலய வழிபாடுகளில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு பிரார்த்தித்தனர்.

# முல்லை. மாவட்டத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி

★ ஆனையிறவு இராணுவ முகாம் சூழலில் இடம்பெற்ற மோதலில்பங்கேற்று 27 7.91 அன்று வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட பிரதீபா (ஜெயந்தி பெரியதம்பி, புதுக்குடியிருப்பு) அவர்களின் புகழுடல் புதுக்குடியிருப்பில் துர்க்கா நினைவு மண்டபத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காகவைக் கப்பட்டபோது பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். பின்னர் புகழுடல் ஊர்தி பவனியாக முல்லைத்தீவு மாவீரர் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு விடுதலைப் புலிகளின்இராணுவமரியாதைகளுடன் தீயுடன் சங்கமமானது.

★ ஆனையிறவு இராணுவ முகாமைநோக்கி முன்னேறிய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட திலகா (சதீஸ்வரி ராஜதுரை, திருமலை) அவர்களின் புகழுடல் புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இங்கு வட்டவைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் முல்லை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செல்வம் மாமா, புதுக்குடியிருப்புப் பிரதேச மகளிர் படையணியின் அரசியல் பொறுப்பாளர் ரம்மியா உட்பட பலர் உரையாற்றினர்.

இவரது புகழுடல் பின்னர் முள்ளியவளை மாவீரர்மண்டபத்திலும் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது இறுதி அஞ்சலியைத் தொடர்ந்து திலகாவின் புகழுடல் பிரதேச மாணவிகளின் பான்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையோடு தீயுடன் சங்கமமாகியது.

## ஜெனாவிற்கு மக்கள் அஞ்சலி

(கொடிகாமம்)

ஆனையிறவு இராணுவத்தினருடன் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை ஜெனா (தங்கராஜா நவநீதன், மீசாலை வடக்கு, கொடிகாமம்) வின் புகழுடல் நேற்றைய தினம் முற்பகல் பதினொருமணியளவில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பெருந்தொகையான மாணவர்களும், பொது மக்களும் திரண்டுவந்து தமது அஞ்சலியைச்செலுத்தினர். அதனைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் இடம் பெற்றது. இதில் வி. பு. ம. முன்னணியின் பிரமுகர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். இதன்பின் வீரவேங்கை ஜெனாவின் புகழுடல் இராணுவமரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குதீயுடன் சங்கமமாகியது.

86)(மு)

# ஆந்திராவில் கதவடைப்பு; 200பேர் பொலிஸால் கைது

(டில்லி)

ஆந்திரப் பிரதேசம் முழுவதும் நேற்று அமைதியாக கதவடைப்பு நடைபெற்றது. சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

குண்டூர்மாவட்டத்தில் உள்ள செம்பூர் என்ற கிராமத்தில் ஏற்பட்ட சாதிக் கலவரத்தில் எட்டுப் பேர் கொலை செய்யப் பட்டதை அடுத்து நேற்று மாநிலம் தழுவிய கதவடைப்பு அனுஷ்டிக்கப்பட்டது. முக்கிய எதிர்க் கட்சியான தெலுங்கு தேசமும், அதன் தோழமைக் கட்சிகளும் இந்த கதவடைப்புக்கு அழைப்பு விடுத்தன.

இதற்கிடையே ஜனதா தளத் தலைவர் ராம்லாஸ் பஸ்வான் தலைமையில் 7எம்.பி கள் அடங்கிய குழு ஒன்று நேற்றுச் சம்பவம் நடந்த இடத்தைச் சென்று பார்த்தது.

# இ. காங்கிரஸ் கட்சி கிளை அமைப்புக்கான தேர்தல்

(டில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் கிளை அமைப்புக்கான தேர்தல் எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்பாக நடத்தி முடிக்கப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பிரதமருமான பி. வி. நரசிம்மராவ் செய்தியாளரிடம் கூறினார்

அவர் மேலும் கூறுகையில், கட்சித் தேர்தல்களை இனி மேலும் தள்ளி வைக்க முடியாது என்று கட்சித்தலைமை உணர்ந்திருப்பதாகவும், இத்தேர்தல்கள் முடியும் வரை மாநில கட்சித் தலைவர்கள் மாற்றப்பட மாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்.

### செப்டெம்பர்

தாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

மேற்படி காலப்பகுதியில் இருந்து இக்கொடுப்பனவுகள் கிடைக்காத சகல ஆசிரியர்களையும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களையும் ஒய்வுபெற்றவர்களையும் சம்பந்தப்பட்ட கோட்ட கல்விப் பணிமனையில் தொடர்பு கொள்ளுமாறும் பொதுச் செயலாளர் கூறுகிறார்.

1988 ஜனவரி தொடக்கம் 1989 ஜூன்வரைக்கானகாலப் பகுதிக்கும் 1990ஜூன் வரைக்கான காலப்பகுதிக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மாகாண மத்திய கல்வி அமைச்சுக்களை வற்புறுத்தி உள்ளதாகவும், இதுதொடர்பான முடிவுகள் விரைவில் மேற்கொள்ளப்படஇருப்பதாகவும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### தமிழகத்தில்

வருவதாகவும் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பது சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். தமிழகத்தில் புலிகள் ஆழமாக வேரூன்றி இருப்பது பொலிஸார் திருச்சியிலும், கோவையிலும் எடுத்து வரும் நடவடிக்கைகள் மூலம் தெளிவாக விளங்குவதாகவும்வாழப்பாடி தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் அ.இ. அ. திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி நிலையாக இருக்கிறது. எந்த ஒரு நேரத்திலும் அதை உடைக்க முடியாது என்றும், இந்த இரு கட்சிகளுக்கும் இடையே பிளவை உண்டாக்கச் செய்யும் சக்திகளின் முயற்சிகளுக்கு இறுதியில் தோல்வியே கிடைக்கும் என்றார்.

சனசமூக நிலையங்கள்

# மக்களுக்கு அரசியல் அறிவை ஏற்படுத்த வேண்டும் -மூர்த்தி

சனசமூக நிலையங்கள் தங்களது பகுதியிலுள்ள மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டுவதோடு, அரசியல் அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டவும் வேண்டும் என நேற்றுக்காலை 10 30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி, குமாரசாமி மண்டபத்தில் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு பேசிய தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

பல கிராமங்களில் பிள்ளைகள் படிப்பறிவின்றியுள்ளார்கள். தாய், தந்தையர்தொழில் செய்கின்ற கிராமங்களில் இந்நிலை அதிகமாகக் காணப்படுகிறது. இங்கு தாய், தந்தை பிள்ளைகள் அனைவருமே படிப்பறிவின்றி வாழ்கிறார்கள். இவர்கள் பற்றி சனசமூக நிலையங்கள் அக்கறை காட்டவில்லை. இதுபோன்று சமூகத்தில் சாபக்கேடாக இருக்கின்ற சாதிப்பிரச்சினையும், இந்நிலையங்களை ஆட்கொண்டிருக்கின்றது. சாதிக்கொரு சனசமூக நிலையங்கள் இருக்கின்ற கேவலமானநிலை எம் மண்ணில் இன்றும் இருக்கின்றது. சாதிப் பிரச்சினை இன்று உலகில் இருப்பது எம் மண்ணிலும் இந்தியாவிலும் தான். வேறு எந்த நாட்டிலும் இந்நிலை இல்லை. ஏன் எமது நாட்டில் மட்டும் இந்நிலை உள்ளது?

இடையில் ஏற்பட்ட பிரபுத்துவ சமுதாயத்தில் காணி பிடிப்பவர்களாலும் பணம் சேர்ப்பவர்களாலும் ஏற்படுத்தப்பட்ட முறையேசாதிமுறையாகும். சாதி குறைந்தவனுக்கும், கூடியவனுக்கும் உருவ அமைப்பில்வேறுபாடுஇல்லை. இன்று மற்றைய நாடுகள் முன்னேறியதற்கு இந்த சாதிகள் இல்லாமலிருந்ததும் ஒரு காரணமாகும். இதனைச் சனசமூக நிலையங்கள் மக்களுக்குப்புரிய வைக்க வேண்டும் என்றார்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் இம் மாதம் முதல் வடபகுதிக்கான உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படுவதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய முக்கிய கலந்துரையாடலொன்று இன்று பிற்பகல் மூன்று மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு சகல பொது ஸ்தாபன அமைப்புகளின் பிரதிநிதிகளையும், பொதுநல சேவையில் ஈடுபட்டுள்ளவர்களையும் வலி·வடக்கு புனர் வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது.

### ஆயுத

இப்படித் தனியார்துறை நிறுவனங்கள் தயாரிக்கும் பாதுகாப்புச்சாதனங்களை வாங்கிக் கொள்வதாக அரசு உறுதியளிக்கும் என்றார்

படைக்கலத்தொழிற்சாலைகள் மற்றப் பொருள்களை உற்பத்தி செய்யவும் அனுமதிக்கப்படும். ஆயுதப் படைகள் நவீனப்படுத்தி அளவைவிடத் தரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார்.

### போதனாசிரியர்

ஒத்ததாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 30ஆம் திகதிக்குமுன்பாக வடக்கு கிழக்கு மாகாண சபையின் காணி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

வர்த்தமானியை ஈழநாதம் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

### புலிகளும்

பிட்ட சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பன்னிரெண்டு பேர் படுகாயமடைந்ததாகவும்தெரிவித்தன.

மூன்று தினங்கள் நடைபெற்ற இக்கடும் மோதல்களில் சிறிலங்கா விமானப் படை விமானங்களும், உலங்குவானூர்திகளும் தொடர்ச்சியான தாக்குதல்களில் ஈடுபட்டன. தொடர்ச்சியான ஷெல் வீச்சும் இடம்பெற்றது.

இம்மோதல்களில் புலிகள் தரப்பிலும் பல போராளிகள் வீரமரணமடைந்தனர். பலர் காயமடைந்தனர்.

அதேவேளை இத்தாக்குதலில் கொல்லப்பட்ட, காயமடைந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை சிறிலங்கா இராணுவத் தரப்பு குறிப்பிடுவதைவிட மிக அதிகம் என களத்தில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### காலாவதி

தைப் பெற முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக யாழ். கல்விப்பணிப்பாளரிடம் இவர்கள் முறையிட்டுள்ளனர்.

(ச)

### இல. தமிழரை

திறந்துள்ளார். போயஸ் தோட்டம், இனிமேல் ஜெயலலிதாவின் இல்லமாக மட்டும் இயங்கும். பொது மக்களுக்கு அங்கு அனுமதி கிடையாது.

# இந்தியாவில் அமெரிக்க முதலீடுகள் அதிகரிக்கும்

இந்தியாவில் அமெரிக்க முதலீடுகள் அதிகரிக்க உள்ளன. இந்தியா அறிவித்துள்ள புதிய பொருளாதார சீர்திருத்தங்களினால், இந்தியாவில் அமெரிக்கா அதிக அளவு முதலீடு செய்வதற்கு வழி பிறக்கும் என்று வாஷிங்டன் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் வில்லியம் கிளார்க் நேற்றுப் புதுடில்லியில் தொழில்துறை இணை அமைச்சர் பேராசிரியர் பி. ஜே. குறியாவைச் சந்தித்த போது மேற்கண்டவாறு கூறினார்.

# மரண அறிவித்தல்கள்

## மிக்கேல் அந்தோனிப்பிள்ளை B A

(இளைப்பாறிய ஆசிரியர், சம்பத்திரிசியார் கல்லூரி)

பாஷையூரைச் சேர்ந்த மிக்கேல் அந்தோனிப்பிள்ளை 09-08-91 அன்று கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற மரியராணி (பொன்றோஸ்) யின் அன்புக் கணவரும், யூலியன் பிரான்சீஸ், மைக்கல் பிறிற்றோ, கலிஸ்ரஸ் யோசவ், காலஞ்சென்ற புறூனோ கிறிஸ்ரி, எல்மோ பற்றிக், திருமதி E. மரினா அன்ரனற், மேபிள் அசம்ரா, யூட்பிறிசில்டா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அமிர்தநாதர் கிறிஸ்ரினா, மிக்கேல் பாக்கியநாதர், (இளைப்பாறிய கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்கள உதவிஆராய்ச்சியாளர்) அவர்களின் அன்புச் சகோதரரும், J. விவியன், B றோகிணி, எட்வேட் ரட்ணசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் யேசுதாசன், வண. பிதா விக்டர் ஞானப்பிரகாசம், அருட் சகோதரிகள் லொறின்டா, A. C. பிறிசில்டா, A. C. பிறிஜட் பாக்கியநாதர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞானப்பிரகாசம் சேயம்மாவின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 11-08-91 இன்று ஞாயிற்றுக்கிழமை 10/7,A கிறீன்லண்ட் லேன், கொழும்பு – 5 இல் இருக்கும் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக 11–8–91 மாலை 4.00 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபரால் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

51, ஈச்சமோட்டை கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.

தகவல்: மி. பாக்கியநாதர்

(R/1631)

## திரு. கந்தையா தனரத்தினம்

(தனம்)

சுன்னாகம் சூராவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளிநொச்சி, 8ஆம், வாய்க்கால் 8ஆம் இலக்க இல்லத்தில் வசித்தவருமான திரு. கந்தையா தனரத்தினம் (தனம்) அவர்கள் பிரான்சில் அகால மரணமானார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 8, 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம், கிளிநொச்சி.

தகவல்: திருமதி. கந்தையா பூரணம்

(R/1633)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.